விண்ணப்பங்களைத் தயார் செய்து கூட அனுப்பியிருக்கிறோம். ஆனால் அந்தந்த ஆலைகளுக்கு கபாஸிடி இருக்கிறது. குறிப்பிட்ட நாளில் பதிவு செய்த கரும்பை எடுத்துக்கொள்ள வேண்டும். அதனால் பதிவு செய்யாத கரும்பை எடுத்துக்கொள்வதற்கு காலதாமதம் ஆகிறது. தண்ணீர் கிடைக் காத காரணத்தினால் கரும்பு தரம் குன்றி, எடை காணாத அளவுக்கு நிலைமை ஏற்படுகிற சூழ்நிலையும், அச்சமும் இருக்கிறது. பதிவு செய்த கரும்பைக் கூட எடுத்துக்கொள்வதற்குக் காலம் கடத்தப்படுகிற நிலைமை கூட இருக்கிறது. முண்டியம்பாக்கத்திலுள்ள ஆலையில் பதிவு செய்த கரும்பையே இப்பொழுது எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. வளவனூர், பனங்குப்பம் போன்ற பக்கத்து கிராமங்களில், பதிவு செய்த கிராமங்களில் கூட இப்பொழுது கரும்பை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. திண்டிவனம் பகுதியில் பதிவு செய்யப்பட்ட கரும்பையே இப்பொழுது எடுக்க முடியாத நிலையில் இருப்பதாக அவர்கள் தங்க ளுடைய நிலைமையை எடுத்துச் சொல்லி வாதிக்கிறார்கள். மறுதாம்புக் கரும்பைப் பொறுத்த வரையில் கூட அதே நிலை தான். எந்த ஆலையில் பதிவு செய்யப்பட்டதோ, அதே ஆலைக்குத் தரவேண்டும் என்ற நிலை இருக்கிறது.

வெல்லத்தின் விலை வீழ்ந்துவிட்ட காரணத்தினால் சர்க்கரை ஆலைக்குக் கரும்பைக் கொண்டு வருகிறார்கள். வெல்லத்தின் விலை ஏறினால், சர்க் கரை ஆலைக்குக் கரும்பு கொண்டுவர மாட்டார்கள். இம்மாதிரி சூழ்நிலை யில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் அரசு கவனித்து அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இம்மாதிரி கரும்பு எடுக்கப்படாத நிலையை உணர்ந்து கரும்பு பயிரிடுபவர்கள் மீண்டும் நெல் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை தானாகவே உருவாகும். இருந்த போதிலும், இப்பொழுது சாகுபடி செய்யப்பட்டிருக்கிற கரும்பு வீணாகப் போகாமல் பார்த்துக் கொள்வதற்கு, எந்தெந்த ஆலைகளை எடுத்துக் கொள்ள முடியுமோ அந்தந்த ஆலைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். திண்டிவனம், ஒலக்கூர் பிர்க்காவை படாளம் பகுதியில் சேர்த்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கரும்பையே தாங்கள் எடுக்க முடியாத நிலையில் இருக்கும்பொழுது, எப்படி திண்டிவனம் பகுதியில் ஏற்கெனவே பதிவு செய்து கொள்ளாத கரும்பை எடுத்துக் கொள்ள முடியும் என்று அவர்களுக்கிருக்கிற சங்கடத்தைத் தெரிவித் திருக்கிறார்கள். விவசாயிகள் குறைந்த விலைக்குக் கூட ரூ. 65-க்குக் கூட கொடுக்க முன் வருகிறார்கள். கரும்பு விலை இப்பொழுது ரூ. 90 ஆக இருந்தாலும் கூட, அன்-ரிஜிஸ்டர்டு கரும்பை ரூ. 65-க்குக் கூட கொடுக்க் முன் வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் கூட ஆலைகள் அந்தக் கரும்பை எடுத்துக்கொள்ள முடியாத சங்கடமான நிலை இருக்கிறது. அரசாங்கம் முயற்சி செய்து, விவசாயிகளுக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்ய முடியுமோ அந்த முறையில் தமிழகத்திலுள்ள ஆலைகள் கரும்பை எடுத்துக்கொள்வதற்கான வழிவகைகள் காணப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** " ஒன் ஆர் டு குவெஸ்சின்ஸ் " தான் என்று விதியில் இருக்கிறது. ஏற்கனவே உறுப்பினர் அவர்கள் முதலிலேயே இரண்டு கேள்விகள் கேட்டாகி விட்டது.

**(உ) பல்லடம் வட்டத்தில் பருவ மழையின்மையும், மின்சாரக் கட்டணத்தை முன் பணமாக வசூலிப்பதை ஒற்றிவைத்தலும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. கே. என். குமார சாமி.

(சிறிது நேரம் கழித்து) உங்களிடம் காப்பி இல்லையா ? நானே உங்களுக்காகப் படித்து விடுகிறேன்.

"கோவை ஜில்லாவில் பல்லடம் தாலுக்காவில் பருவமழை தவறி விட்டதால் பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலையில் மின்சார பம்புசெட்டு உபயோகிக்கும் விவசாயிகளுக்கு மின்சார இலாகா அடிஷனல் செக்யூரிடி டிபாசிட் என்ற தொகை வசூல் செய்வதற்காக விவசாயிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளதை ஓராண்டு தள்ளிவைக்க வேண்டிய அவசியம்பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, நடைமுறையிலுள்ள விதிகளின்படி தமிழ்நாடு மின்சார வாரியம் விவசாயம் உட்பட எல்லா மின்சாரம் பயன் படுத்துவோரிடமிருந்தும் மூன்று மாதத்திய மின்சாரக் கட்டணம் தோராயமாக நிர்ணயித்து முன் பணமாக வசூலிக்கிறது. இம்முன் பணம் மூன்று மாதக் கட்டணத்துக்கும் குறைவாயுள்ளது என்று தெரியும்பொழுது மேலும் அதிகப்படி முன் பணம் கட்டும்படி மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட நபர்களைக் கேட்கிறது. மின்சாரம் உபயோகிப்போர் இந்த அதிகப்படி முன் பணத்தை ஒரே தடவையில் கட்டுவதற்குச் சிரமம் தெரிவித்தால் ஒவ்வொரு நபரின் பிரச்சினையும் உசிதமான முறையில் பரிசீலிக்கப்பட்டு, அந்நபர்கள் இவ்விதிகளின்படி பணத்தை தவணை முறையில் கட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** கடந்த மூன்று ஆண்டு காலமாக மழை பெய்யாக் காரணத்தினால் ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அடிஷனல் செக்யூரிடி டெபாசிட் தள்ளிவைக்கப்பட்டு, மறுபடியும் மீண்டும் இந்த ஆண்டு அப்படித் தள்ளிவைக்கப்பட்ட டெபாசிட் தொகையை வசூல் செய்வதற்கான நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவ மழை தவறி வறட்சியாக இருப்பதன் காரணமாக, மேலும் அந்த டெபாசிட் தொகையைக் கட்ட முடியாத நிலையில் விவசாயிகள் திண்டாடுவதால், மீண்டும் அது தள்ளி வைக்கப்பட்டு, அப்படிக் கொடுக்கப்பட்ட நோட்டீஸ் இந்த ஆண்டும் நிறுத்திவைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அதை அமைச்சர் அவர்கள் உத்தரவு மூலம் செய்யுமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, எல்லா விவசாயிகளுக்கும் தள்ளி வைக்க வேண்டும் என்று சொல்லுவதைவிட, கூடுதலான சிரமம் உள்ள விவசாயிகளுக்கு—தனிப்பட்ட முறையில் மின்சார வாரியத்திற்கு தெரிவித்தால், அதைப் பரிசீலனை செய்து—இப்பொழுது இருப்பது போல தவணை முறையில் அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

## 8. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) கல்லூரி கல்வி குறித்த பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU S. AGNIRAJU : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Collegiate Education (Sixth Report).

### (ஆ) 1965-66-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் 1967-ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை ஆகியவற்றின் மீதான பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I rise to present the Report of the Committee on Public Accounts (1968-69) on the Appropriation Accounts 1965-66 and Audit Report, 1967.